# WORD OF CHRIST

## கிறிஸ்துவின் வசனம்

மரம் 7 செப்டம்பர் 1998 கனி 2

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல
ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B.அர்ஜுனன்

கிறிஸ்துவின் வசனம்! தினந்தோறும் படிக்கவேண்டிய வசனம்!!

## சபையில் உங்களது பங்கு என்ன?

| | அல்லது | |
|---|---|---|
| கொடுப்பவரா | | வாங்குபவரா |
| தூணா | | தூங்குபவரா |
| பெலமுள்ளவரா | | பிரச்சனைவாதியா |
| தாழ்மையுள்ளவரா | | பெருமையுள்ளவரா |
| உதவுபவரா | | உபத்திரவம் கொடுப்பவரா |
| ஆஜராகிறவரா | | ஆஜராகாதவரா |
| சமாதானம் பண்ணுகிறவரா | | சண்டை பண்ணுகிறவரா |

### வேண்டுகோள்

உங்கள் முகவரியில் மாற்றம் ஏற்பட்டால் உடனே ஒரு அஞ்சல் அட்டையில் **Reg. No**. உடன் புதிய முகவரியை எழுதி தெரியப் படுத்துங்கள். உங்கள் ஒத்துழைப்புக்கு நன்றி.

*ஆசிரியர்.*

### இதழின் உள்ளே . . . பக்கம்


1. புது உடன்படிக்கை ........ 1
2. சிந்தனைக்கு ........ 4
3. பரிசுத்த ஆவியானவரின் அளவுகள் ........ 5
4. ஆகஸ்டு மாத இதழின் விடைகள் ........ 7
5. கற்சாடிகள் ........ 8
6. ஆகஸ்டு மாத இதழின் வேத அறிவுப்போட்டியில் வெற்றி பெற்றவர்கள் ........ 8
7. 7 அப்பம் (சிறுவர் பகுதி) ........ 9
8. உதடுகள் ........ 9
9. திருமணம் - கிறிஸ்தவ குடும்பம் ........ 10
10. படையின் ஒழுங்கும், வீழ்ச்சியும் (பெண்கள் பகுதி) ........ 11
11. நான் யார் ? ........ 12
12. இம்மாத வேத அறிவுப்போட்டி (அட்டையின் உள்ளே) ........ 13



Published by

**WORLD LITERATURE PUBLICATIONS**

*POST BOX NO. 5, BATLAGUNDU - 624 202*

**SOUTH INDIA.**

# கிறிஸ்துவின் வசனம்


# WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் 7 | செப்டம்பர் 1998 | கனி 2


ஆசிரியருரை

## புது உடன்படிக்கை
## A NEW COVENANT




புது உடன்படிக்கை என்பது தேவன் மனிதனோடு செய்த புதிய ஒப்பந்தம் அல்லது புதிய கட்டளை. இதற்கு மத்தியஸ்தர் இயேசுகிறிஸ்துவே என வேதம் போதிக்கிறது. புது உடன்படிக்கை என்று சொல்லும்போது, பழைய உடன்படிக்கை ஒன்று இருந்திருக்க வேண்டும். அது என்னவாயிற்று? ஏன் புதிய உடன்படிக்கை வந்தது? புதிய உடன்படிக்கையை பரிசுத்த வேதாகமத்தில் எங்கு காண்கிறோம்? அதற்கும், நமக்கும் என்ன சம்பந்தம்? என்ற கேள்விகளுக்கு வேதவசன ஆதாரத்தோடு விடை காண்போம்.

எபிரெய ஆசிரியர் குறிப்பிடும்போது "புது உடன்படிக்கை என்று அவர் சொல்லுகிறதினாலே முந்தினதை பழமையாக்கினார்; பழமையானதும், நாள்பட்டதுமாயிருக்கிறது உருவழிந்து போகக் காலம் சமீபித்திருக்கிறது" என்கிறார். எபிரெயர் 8:13ல் பழைய உடன்படிக்கை அதாவது பழைய கட்டளை அல்லது பிரமாணம், ஒப்பந்தம் பழமையானதும், நாள்பட்டதுமாயிருக்கிறது. உருவழிந்து போகக் காலம் சமீபித்திருக்கிறது என்று வாசிக்கின்றோம். உதாரணமாக, இராஜாக்களின் காலத்தில் கொடுக்கப்பட்ட கட்டளை இன்று இருக்கிற அரசியல் சட்டத்திற்கு ஒவ்வாது. அதைப்போலவே மோசே காலத்தில் கொடுக்கப்பட்ட கட்டளை இன்று கிறிஸ்துவின் கீழ் வாழ்கின்ற நமக்கு அது ஒவ்வாது. அப்படியென்றால் பழைய ஏற்பாட்டைக் கிழித்துப் போட்டுவிடலாமா என்று அநேகர் வாதிடுவர்.

"நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மை கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது. விசுவாசம் வந்த பின்பு நாம் உபாத்திக்குக் கீழானவர்களல்லவே" (கலாத்தியர் 3:24,25). ஒரு குழந்தையை ஆசிரியரிடம் அழைத்துச் செல்லும் ஒரு ஆயாவைப் போல நியாயப்பிரமாணம் இருந்தது. ஆசிரியரிடம் குழந்தை வந்தவுடன் ஆயாவின் வேலை முடிந்தது. பின்பு ஆசிரியரே முற்றும் பொறுப்பாளி. ஆகையால் நாம் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறோம். "இரண்டாவதை நிலைநிறுத்துவதற்கு முதலாவதை நீக்கிப்போடுகிறார்" (எபிரெயர் 10:9). நீக்கிப் போடுகிறார் என்றால் என்ன அர்த்தம்? "சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாமிசத்தினாலே ஒழித்து" என்று

எபிரெயர் 2:15ல் வாசிக்கின்றோம். ஒழித்து என்றால் இல்லாமல் செய்து அல்லது நீக்கிவிட்டு "நமக்கு எதிரிடையாகவும், கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின் மேல் ஆணியடித்து ... சிலுவையிலே வெற்றி சிறந்தார்" (கொலோசெயர் 2:14-15). இப்படியிருக்க பழைய பிரமாணங்களுக்கு அடிமைப்பட விரும்புகிறதெப்படி? அதைக் குலைத்துப் போட்டு நடுவிலிராதபடி எடுத்துப்போட்டாரே.

> நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது. கிருபையும், சத்தியமும் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின.
> - யோவான் 1:17.

"முந்தின கட்டளை பெலவீனமுள்ளதும், பயனற்றதுமாயிருந்ததினிமித்தம் மாற்றப்பட்டது. நியாயப்பிரமாணமானது ஒன்றையும் பூரணப்படுத்தவில்லை. அதிக நன்மையான நம்பிக்கையை வருவிப்பதோ பூரணப்படுத்துகிறது; அந்த நம்பிக்கையினாலே தேவனிடத்தில் சேருகிறோம்" (எபிரெயர் 7:18-19). புது உடன்படிக்கையானது முழுவதையும் மாற்றி அதிக நன்மையான நம்பிக்கையை ஏற்படுத்துகிறது. "விசுவாசமானது நம்பப்படுகிறவை களின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது" (எபிரெயர் 11:1). ஆண்டவர் குறிப்பிடும் போது "நியாயப்பிரமாணத்தையானாலும், தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்" (மத்தேயு 5:17) என்றார். நிறைவேற்றினாரா? ஆம்! சிலுவையில் வெற்றி சிறந்தார் என்று பார்த்தோம். "உன்னிடத்தில் நீ அன்புகூருவது போல பிறனிடத்திலும் அன்புகூருவாயாக, என்கிற இந்த ஒரே வார்த்தையிலே நியாயப்பிரமாணம் முழுவதும் நிறைவேறும்" (கலாத்தியர் 5:14). அந்தப்படியே நிறைவானதாகிய அன்பு வந்தவுடன் குறைவானவைகளாகிய இவைகளெல்லாம் ஒழிந்துபோயின என்று 1 கொரிந்தியர் 13:10ல் படிக்கின்றோம்.

புது உடன்படிக்கையை நாம் புதிய ஏற்பாட்டிலே காண்கிறோம். "நான் புதிய கற்பனையையும் உங்களுக்கு எழுதுகிறேன். இது அவருக்குள்ளும், உங்களுக்குள்ளும் மெய்யாயிருக்கிறது; ஏனென்றால், இருள் நீங்கிப்போகிறது, மெய்யான ஒளி இப்பொழுது பிரகாசிக்கிறது" (1 யோவான் 2:8). இப்பொழுது என்றால் இக்காலத்தில் நமக்கு கிறிஸ்து மெய்யான ஒளியாக, வழியாக, நல்மேய்ப்பராகப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார். அவருடைய உடன்படிக்கையின் கீழிருக்கிறோம். "அந்த உடன்படிக்கை எழுத்துக்குரியதாயிராமல், ஆவிக்குரியதாயிருக்கிறது; எழுத்து கொல்லுகிறது, ஆவியோ உயிர்ப்பிக்கிறது" (2 கொரிந்தியர் 3:6). மேலும் இதைக் குறித்து எபிரெய ஆசிரியர் சற்று விளக்கமாகக் குறிப்பிடுகிறார். "அவர்களுடைய பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து கொண்டு வரும்படிக்கு நான் அவர்களுடைய கையைப் பிடித்த நாளிலே அவர்களோடு பண்ணின உடன்படிக்கையைப் போல இது இருப்பதில்லை; அந்த உடன்படிக்கையிலே அவர்கள்

நிலைநிற்கவில்லையே, நானும் அவர்களைப் புறக்கணித்தேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். அந்த நாட்களுக்குப் பின்பு நான் இஸ்ரவேல் குடும்பத்தாரோடே பண்ணும் உடன்படிக்கையாவது: என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து, அவர்களுடைய இருதயங்களில் அவைகளை எழுதுவேன், நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்" (எபிரெயர் 8:9-10). புதிய உடன்படிக்கை என்பது பழைய உடன்படிக்கையாகிய நியாயப்பிரமாணத்தைப் போலல்ல. அது கற்பலகையில் எழுதப்பட்டது இது இருதயமாகிய சதையாகிய பலகையில் எழுதப்படுகிறது.

"பூர்வகாலங்களில் பங்கு பங்காகவும் வகை வகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்" (எபிரெயர் 1:1-2). சகல அதிகாரங்களையும் உடையவராகிய இயேசுகிறிஸ்துவிடம் நீங்கள் திருப்பப்பட்டு உள்ளீர்கள். வீணும் வெறுமையுமான பழைய வழிபாடுகளுக்கு நீங்கள் திரும்பாமல் புதிதும் ஜீவனுமான "புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும், ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப் பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள். பேசுகிறவருக்கு நீங்கள் செவிகொடுக்க மாட்டோமென்று விலகாதபடி எச்சரிக்கையாயிருங்கள்" (எபிரெயர் 12:24-25). பிரியமான சகோதரனே, சகோதரியே, புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுகிறிஸ்துவின் கட்டளைக்கு முழுவதும் கீழ்ப்படிந்து அதன்படி நடப்போமாக!

விசுவாசிக்கிற எவனுக்கும் நீதியுண்டாகும்படியாக கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார்.
- ரோமர் 10:4

நியாயப்பிரமாணத்துக்கு நாம் மரித்தவர்களாகி, அதினின்று விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம்.
- ரோமர் 7:6.

அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது.
- ரோமர் 13:10.

"மோசேயின் பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம் பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே; தேவனுடைய குமாரனை காலின் கீழ் மிதித்து, தன்னை பரிசுத்தம் செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப் பாருங்கள் . . . ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே" (எபிரெயர் 10:28-31). புது உடன்படிக்கையை ஒருவரும் தள்ளுகிறதில்லை. அதில் ஒன்றை கூட்டவோ குறைக்கவோ ஒருவருக்கும் அதிகாரமில்லை. அப்படி மீறிச் செய்தால் அவன் கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்று வேதம் எச்சரிக்கிறது.

இன்றைய நாட்களில் பழைய உடன்படிக்கையையும், புதிய உடன்படிக்கையையும் கலந்து கைக்கொள்ளுகிற சபைகள் தான் உலகத்தில் அதிகம். இவ்விரண்டிற்கும் வித்தியாசம் தெரியாமல் போதித்துக் கொண்டு "தாங்கள் சொல்லுகிறது இன்னதென்றும், தாங்கள் சாதிக்கிறது இன்னதென்றும் அறியாதிருந்தும் நியாயப்பிரமாணப் போதகராயிருக்க விரும்புகிறார்கள்" (1 தீமோ. 1:7). பழையதையும், புதியதையும் இணைக்கக் கூடாதென்பது நமது ஆண்டவருடைய போதனை. ஆனால் இங்கு அவருடைய போதகத்தைத் தள்ளி இரண்டையும் சேர்த்து தேவனை ஆராதிக்கிறார்கள். "நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள்" என கலாத்தியர் 5:4ல் வாசிக்கின்றோம். தேவன் நீக்கிப்போட்ட பழைய உடன்படிக்கையைப் பிடித்துக் கொண்டும், அந்த வாக்குத்தத்தங்களைப் பிடித்துக் கொண்டும், ஆவிக்குரிய ஆராதனையில் அவைகளைப் போதிப்பீர்கள் என்றால் "புளிப்புள்ள கொஞ்ச மாவானது பிசைந்த மாவனைத்தையும் உப்பப்பண்ணும்" (கலாத்தியர் 5:9).

புது உடன்படிக்கை என்று சொல்லும்போது, அவருடைய இரத்தத்தினால் கிடைக்கும் இரட்சிப்பை அனுபவிக்கிற ஒரு கிறிஸ்தவன் அதாவது கிறிஸ்துவை உடையவன் நியாயப்பிரமாணத்திற்கு அடிமையாவது எப்படி? பழைய உடன்படிக்கை நல்லதென்றால், கிறிஸ்து வந்தது வீணாய் போயிற்றே. நாம் என்ன சொல்லுவோம்? "நியாயப்பிரமாணம் சொல்லுகிறதெல்லாம் நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்டிருக்கிறவர்களுக்கே சொல்லுகிறதென்று அறிந்திருக்கிறோம்" (ரோமர் 3:19). நமக்கல்ல! பிரிய நண்பரே, சிந்தித்து வேத வசனங்களை நன்கு யோசித்து சரியாக தேவகட்டளைப்படி, அவர் சித்தப்படி, ஒன்றையும் மாற்றாமல் ஏற்றுக்கொண்டு புது உடன்படிக்கையின் கீழ் அவரை ஆராதித்து அக்கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்து, பந்தயப்பொருளைப் பெற இலக்கை நோக்கித் தொடருங்கள். கர்த்தர் உங்களை புது உடன்படிக்கையின் சத்தியத்திற்குள் வழிநடத்துவாராக!

## சிந்தனைக்கு!

**நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக் கொள்வதெதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார். யோவான் 16:23.**

இயேசுவைத் தரித்துக் கொண்ட ஒவ்வொருவருக்கும் அப்பா, பிதாவே என்று கூப்பிடத்தக்கதாக கலாத்தியர் 4:6ன் படி சிலாக்கியம் கொடுக்கப்பட்டிருக்கும் போது

நீங்கள் ஏன்?

அவசர ஜெப உதவிக்கு 24 மணி நேரம் காத்திருக்கிறோம் என்று சொல்பவர்களை நாடவேண்டும்?

அவர் ஜெபித்தால் சரியாகும், இவர் ஜெபித்தால் சரியாகும் என்று மனிதர்களை நாடவேண்டும்?

**குறிப்பு : எங்கும் பிதாவைத் தொழுது கொள்ளும் காலத்திலிருக்கிறோம் - யோவான் 4:21.**

தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே - 1 தீமோத்தேயு 2:5.

# பரிசுத்த ஆவியானவரின் அளவுகள்
## MEASURES OF THE HOLY SPIRIT

அற்புத அடையாளங்கள் இன்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என பல மக்கள் நம்புகின்றனர். முதல் நூற்றாண்டில் அப்போஸ்தலர்களுக்கு பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கு எப்படித் தேவைப்பட்டதோ, அதேபோல இன்றைய தேவனுடைய பிள்ளைகளுக்கும் அது தேவையாக உள்ளது என்று இம்மக்கள்தான் உபதேசிக்கின்றனர். ஆனால், பரிசுத்த ஆவியானவரின் அளவுகளைப் பற்றி பல மக்களுக்கு ஞானமில்லாத காரணமே இந்தக் குழப்பங்களின் விளைவாகும்.

**1. கிறிஸ்து, ஆவியை அளவில்லாமல் பெற்றார்.**

“தேவனால் அனுப்பப்பட்டவர் தேவனுடைய வார்த்தைகளைப் பேசுகிறார்; தேவன் அவருக்குத் தமது ஆவியை அளவில்லாமல் கொடுத்திருக்கிறார்” (யோவான் 3:34). அதின் விளைவாக சகல காரியங்களையும் செய்யும் வல்லமையை அவர் பெற்றார். அவர் முடவர்களை நடக்கச் செய்தார், விழி இழந்தோருக்கு பார்வை அளித்தார், ஊமைகளைப் பேசச் செய்தார், செவிடர்களைக் கேட்கச் செய்தார், திரளான மக்கள் கூட்டத்திற்கு உணவளித்தார், தண்ணீர் மேலே நடந்தார், சமுத்திரத்தை அடக்கினார், மற்றும் மரித்தோரை உயிரோடு எழுப்பினார். அதற்கும் மேலாக, மரித்தோரிலிருந்து அவர் உயிர்த்தெழுந்தார். ஆனால், இப்படி ஏன் செய்தார்? வார்த்தையை உறுதிப்படுத்தி, விசுவாசிகளை உண்டாக்க (யோவான் 20:30,31).

**2. பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கு.**

புதிய ஏற்பாடு முழுவதிலுமாக இரண்டு நிகழ்ச்சிகளில் மட்டுமே இது நமக்குக் காட்டப்படுகிறது. முதலாவது, அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கைப் பெற்றனர் (அப்போஸ்தலர் 2). இதற்கு முன்பாக, கிறிஸ்து தேற்றரவாளனை அவர்களிடம் அனுப்புவதாகவும், சகல சத்தியத்திற்குள்ளும் அவர்களை அவர் வழிநடத்துவார் என்றும் வாக்களித்திருந்தார் (யோவான் 16:13). கிறிஸ்து பரத்திற்குச் சென்றுகொண்டிருந்தார்; அப்போஸ்தலர்களுக்கு இன்னும் உதவி தேவைப்பட்டதால், அவர்களை வழிநடத்த பரிசுத்த ஆவியானவரை அனுப்புவதாக அவர் சொன்னார். அவர்கள் பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கைப் பெற்ற பின்னர் அந்நிய மொழிகளில் பேசவும், முடவர்களை சுகமாக்கவும், நோயாளிகளைக் குணப்படுத்தவும், மரித்தோரை எழுப்பவும், தங்கள் கைகளை பிறர்மேல் வைத்து தம்மக்கள் அற்புதங்களைச் செய்யும் வல்லமைகளைப் பெற்றுக் கொள்ளவும் செய்தனர்.

இரண்டாவதாக, யூதர்களைப் போலவே புறஜாதியாரும் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தனர் என்பதைக் காட்ட

கொர்நேலியுவும் அவனது வீட்டாரும் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றனர் (அப்போஸ்தலர் 10 & 11). அவர்கள் அதைப் பெற்று, அந்நிய மொழிகளில் பேசி அதை நிரூபித்த பின்னர் "நம்மைப் போலப் பரிசுத்தஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்நானம் பெறாதபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா?" என்று தெரிந்துகொள்ள பேதுரு விரும்பினார் (அப்போஸ்தலர் 10:47). அந்த நிகழ்ச்சியை அவர் விளக்கும்போது, "நான் பேசத் தொடங்கினபோது, பரிசுத்த ஆவியானவர் ஆதியிலே நம்மேல் இறங்கினது போலவே, அவர்கள் மேலும் இறங்கினார்" (அப்போஸ்தலர் 11:15) என்று அவர் சொன்னார். எல்லா விசுவாசிகளும் பெற்றது போல, கொர்நேலியுவும் அவனது வீட்டாரும் பரிசுத்த ஆவியைப் பெற்றிருந்தார்கள் என்று பேதுரு கூறவில்லை; மாறாக அவர்கள் (அப்போஸ்தலர்கள்) பெற்றது போல அவனும் அவனது வீட்டாரும் பரிசுத்த ஆவியைப் பெற்றிருந்தனர் என்று அவர் கூறுவதைக் கவனியுங்கள். அப்போஸ்தலர்கள் ஆதியில் பெற்றிருந்ததைப் போல அவர்கள் பெற்றிருந்தனர் என்று அவர் சொல்லுகிறார்.

**3. கைகளை வைத்துக் கொடுக்கும் அளவிலான பரிசுத்த ஆவி.**

அப்போஸ்தலர்கள் குறைந்த எண்ணிக்கையில் இருந்த படியாலும், இன்னும் பல காரியங்கள் செய்யப்பட வேண்டிய திருந்ததாலும் அவர்கள் (அப்போஸ்தலர்கள்) பலரின் மேல் கைகளை வைத்து, அவர்களும் பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றுக் கொள்ளச் செய்தனர். முதலாவதாக ஏழு பேர்களின்மேல் அப்போஸ்தலர்கள் கைகளை வைத்தனர் (அப்போஸ்தலர் 6:6). பிலிப்பு போன்ற மனிதர்கள் சமாரியாவுக்குச் சென்று அற்புதங்களைச் செய்யக்கூடிய வல்லமையை இது அளித்தது. அதின் விளைவாக, பல மக்கள் நற்செய்திக்குக் கீழ்ப்படிந்தனர். என்றபோதிலும், பிலிப்பு பெற்ற வல்லமையை பிறருக்குக் கொடுக்க அவருக்கு இயலவில்லை. பின்னர் பேதுரு, யோவான் ஆகிய அப்போஸ்தலர்கள் எருசலேமிலிருந்து அழைக்கப்பட்டு, அவர்களுடைய கைகளை மக்கள் மேல் வைத்து, அற்புதங்கள் செய்யும் வல்லமையை அவர்களுக்குக் கொடுத்தார்கள் (அப்போஸ்தலர்கள் 8:14-17).

**4. சாதாரண அளவிலான பரிசுத்த ஆவியானவர்.**

பரிசுத்த ஆவியின் திருமுழுக்குப் பெற்றவர்களையும், கைகளை வைத்து பெறும் அளவிலான பரிசுத்த ஆவியைப் பெற்றவர்களையும் தவிர, பிற அனைவரும் சாதாரண அளவிலான பரிசுத்த ஆவியைப் பெற்றனர். பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டதை இது உறுதிப்படுத்தியதே தவிர, அற்புதங்கள் செய்யும் வல்லமையைத் தரவில்லை. பெந்தெகொஸ்தே நாளில் பேதுரு மக்களிடம் கூறினார்: "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" (அப்போஸ்தலர் 2:38).

நினைவிருக்கட்டும். பரிசுத்த ஆவியின் திருமுழுக்கு அப்போஸ்தலர்களுக்கு மட்டுமே வாக்களிக்கப்பட்டிருந்தது. கர்த்தரால் நடத்தப்பட்டது. எல்லா சத்தியத்திற்குள்ளும் அவர்களை வழிநடத்த அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. வசனத்தை உறுதிப்படுத்தவும், புதிய ஏற்பாட்டை எழுதுவதில் அவர்களை இயக்கவும் கொடுக்கப்பட்டது. மேலுமாக, கொர்நேலியுவும் அவன் வீட்டாருடைய காரியத்தில் தண்ணீர் திருமுழுக்குப் பெறும் முன்பாக அதைப் பெற்றிருந்தனர்.

பின்னர், கைகளை வைத்துக் கொடுக்கும் அளவிலான பரிசுத்த ஆவி அப்போஸ்தலர்களால் மட்டுமே தரப்பட்டது. எனவே அப்போஸ்தலர்களும், அவர்கள் யாரின் மேல் கைகளை வைத்தார்களோ அவர்களும் மரித்தபோது, பரிசுத்த ஆவியின் இந்த அற்புதங்கள் செய்யும் அளவுகள் ஒழிந்துபோயின. அவ்வேளையில், அவைகளுக்கு இனி எந்த அவசியமும் இல்லாது போயிற்று. ஏனெனில், புதிய ஏற்பாடு எழுத்து வடிவில் கொடுக்கப்பட்டிருந்தது; அது மனிதனை எல்லா சத்தியத்திற்குள்ளும் வழிநடத்தப் போதுமானதாக இருந்தது (யாக்கோபு 1:25; 2 தீமோத்தேயு 3:16,17).

ஆனால், இன்று தாங்கள் பரிசுத்த ஆவியின் திருமுழுக்குப் பெற்றிருப்பதாகவும், அற்புதங்கள் செய்யும் வல்லமை தங்களிடம் இருப்பதாகவும் உரிமை கோருபவர்களைப் பற்றிய காரியம் என்ன? அவர்கள் ஏமாற்றப்பட்டிருக்கின்றனர், தவறாக வழிநடத்தப் பட்டுள்ளனர், அவர்கள் போலிகள், தேவனுடைய விருப்பத்தின்படி கூட அவர்கள் நடப்பதில்லை. அப்படியிருக்கும்போது, ஆவி அவர்களை எவ்வாறு வழிநடத்தும்? வேதாகமத்தில் காணப்படாத சபைக்குள் அவர்களை சேர்க்கவும், மனிதன் உண்டாக்கிய பெயர்களைத் தரித்துக் கொள்ளவும் ஆவியானவர் வழிநடத்துவாரா? நிச்சயமாக இல்லை. அவர்கள் உரிமை கொண்டாடும் வல்லமை அவர்களுக்கு இருக்குமேயானால், பின் இயேசுவும், அப்போஸ்தலர்களும் செய்த எல்லாக் காரியங்களையும் அவர்கள் செய்யக்கூடும் என்றெல்லாம் பீற்றிக்கொள்ளுவதையும் தவிர வேறு எதையும் அவர்களால் செய்ய இயலாது என்பதே உண்மை.

எனது நண்பரே! அவர்களுடைய கள்ள உபதேசங்களில் ஏமாந்து போகாதீர். மாறாக, வேதாகமத்திற்குச் செல்லுங்கள். அதுவே உங்களை வழிநடத்துவதாக இருக்கட்டும்.

*J.C. CHOATE* — *தமிழில் எஸ். எஸ். ராஜன்*

## ஆகஸ்டு மாத இதழின் விடைகள்

1. குளிர்ந்த – நீதிமொழிகள் 25:25
2. ஆசா – 2 நாளாகமம் 15:16
3. பாவம் – ரோமர் 6:12
4. மெய்யை – எபேசியர் 4:25
5. இயேசுகிறிஸ்து – கொலோசெயர் 1:15
6. யோசியா
7. உசியா
8. நிலைநிற்கமாட்டாதே
9. பவுல்
10. தேவனுடைய

# கற்சாடிகள்



பிரியமானவர்களே! நமது இரட்சகர் இயேசுவின் பார்வையில் பட்ட ஆறு யூதர்களின் பாத்திரங்களைச் சுத்திகரிக்கும் கற்சாடிகள். மனிதனே, தேவனிடத்திற்குத் திரும்பி வா. அவர் உன்னை அழைக்கிறார் (மத்தேயு 11:28). வெறுமையாக இருக்கின்ற உன்னை ஆசீர்வாதத்தினால் நிரப்புவார். சோர்ந்து போகிறாயா? தேவன் பெலன் தருவார் (ஏசாயா 40:29). சத்துவமில்லாதவனுக்கு சத்துவத்தைப் பெருகப் பண்ணுகிறார். மனிதர்கள் உன்னுடைய பெலவீனங்களைக் குறித்து பரிகாசம் பண்ணலாம். ஆனால் எபிரெயர் 4:15ன்படி நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக்கூடாத . . . பிரதான ஆசாரியர் நமக்கிருக்கிறார். வெறும் தண்ணீரால் நிறைக்கப்பட்ட கற்சாடிகள் ருசியுள்ள திராட்சரசத்தைக் கொடுக்கும் கற்சாடியாய் மாற்றப்பட்டது (யோவான் 2:9-10). இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரன் (ரோமர் 1:5). அவர் உனக்குள் வந்து வாசம்பண்ண அவருடைய கற்பனைகளைக் கைக்கொள் (வெளி. 3:20; யோவான் 14:15). நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்.

திராட்சரசத்தை ருசிபார்த்த அனைவரும் சந்தோஷப்பட்டது போல இதை வாசிக்கிற உங்களையும் ருசி நிறைந்த மனிதனாக மாற்ற விரும்புகிறார். இன்றே ஒப்புக்கொடு (எபேசியர் 1:3) ஆவிக்குரிய எல்லா ஆசீர்வாதங்களினாலும் நம்மை ஆசீர்வதிக்க வல்லவராயிருக்கிறார். இன்றே அவரையும், அவருடைய சபையையும் (மத்தேயு 16:18, ரோமர் 16:16, எபே. 4:4) அறிய விரும்பு.

*– S. வின்சென்ட்*


## ஆகஸ்டு மாத இதழின் வேத அறிவுப்போட்டியில் வெற்றிபெற்றவர்கள்

1. N. டேனியல் தமிழ்வாணன் – மேல்விசாரம்
2. R. நோபின் – ஐரேனிபுரம்
3. R. ஜெபர்சன் ஜேக்கப் – ஐரேனிபுரம்
4. ஜெயராஜ் – சிருக்கினார்
5. பெரியசாமி – மங்களப்பட்டி
6. G. பாபு – மங்களப்பட்டி
7. K. கண்ணன் – இடையன்வலசு
8. R. பெருமாள் – புதுப்பாளையம்
9. ரேணு – சேமிங்கி
10. A. ரவிச்சந்திரன் – சேமிங்கி
11. S. ரேச்சல் அமுதமணி – மேல்விசாரம்
12. V. ஜாண்பால் – கோவில்பட்டி
13. M. சித்ரா – அமரபூண்டி
14. K. கவிதா – அமரபூண்டி
15. M. பால்ராஜ் – அமரபூண்டி
16. A. சிவகாமி – கீரனூர்
17. M. மணிவேல் – கீரனூர்
18. S. சம்பத்குமார் – கொங்குநகர்
19. விமல் – வெங்கப்பூர்
20. முத்துகணேசன் – சின்னக்காம்பட்டி
21. P. இம்மானுவேல் – ஏலமலை
22. G. அன்னலட்சுமி – கன்னியாகுமரி
23. R. ரகுபதி – செட்டிபாளையம்
24. D. சிவகாமி – செட்டிபாளையம்
25. M. கலையரசன் – குன்னூர்
26. புவனேஸ்வரி – குன்னூர்
27. லலிதா – குன்னூர்
28. பேபி – குன்னூர்
29. பாக்கியம் – குன்னூர்
30. M. ஆனந்தகுமார் – குன்னூர்
31. திருப்பதி – குன்னூர்
32. ராஜேஸ் – குன்னூர்
33. சாமுவேல் – குன்னூர்
34. கல்பனா – குன்னூர்
35. M. பத்மாவதி – குன்னூர்
36. A. ராஜ்குமார் – வண்டிபெரியார்
37. J. மேரி எலிசபெத் கலைவாணி – வதிலை
38. N. நகோமி ஜாய் – உபதலை
39. P. பெரியசாமி – நா.க.வலசு

சிறுவர் பகுதி

வேதபகுதி மத்தேயு 15:30-38

# 7 அப்பம்



இயேசு ஆண்டவர் அநேகரை சுகப்படுத்திக் கொண்டுவந்தாருல. அப்போ, அநேக ஜனங்கள் இயேசுவின் பின்னே மூன்று நாளா ஒன்றும் சாப்பிடாம நடந்தே போனாங்க. இதை அறிந்த நமதாண்டவர் மிகவும் இரக்கப்பட்டார். உடனே என்ன செய்தாரு தெரியுமா? தம்முடைய சீஷர்களை அழைத்து, இவர்களைப் பட்டினியாய் அனுப்ப எனக்கு மனதில்லை. வழியில் சோர்ந்து போவார்களே, என்று சொன்னாரு. அதற்கு சீஷர்கள் இத்தனை பேருக்கும் திருப்தி உண்டாகும்படி தேவையான அப்பங்கள் இந்த வனாந்தரத்திலே நமக்கு எப்படி அகப்படும் ஆண்டவரே என்றார்கள்.

உடனே இயேசு உங்களிடத்தில் எத்தனை அப்பங்கள் இருக்கிறது என்று கேட்டாரு. அதற்கு சீஷர்கள் 7 அப்பங்களும், சில சிறு மீன்களும் இருக்கிறது என்றார்கள். அப்படியானால் ஜனங்களைப் பந்தியில் உட்காரச் சொல்லுங்கள் என்று சொன்னாரு. என்ன ஆச்சரியம் பாருங்க! வெறும் 7 அப்பமும், சில சிறு மீன்களும்தான் இருக்கு. ஆனா ஆண்டவர் எல்லா ஜனங்களையும் பந்தியில் உட்காரச் சொல்லிட்டாரு. எப்படி பத்தும்? முடியாதா என்ன?

அந்த ஏழு அப்பங்களையும், மீன்களையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, பிட்டு தம்முடைய சீஷர்களிடத்தில் கொடுத்தாரு. சீஷர்கள் ஜனங்களுக்குப் பரிமாறினாங்க. பாருங்க, எடுக்க எடுக்க வந்துகொண்டேயிருந்தது. என்ன ஆச்சரியம்! எல்லாரும் நல்லா திருப்தியா சாப்பிட்டாங்க. மீதம் 7 கூடை நிறைய எடுத்தாங்க.

சாப்பிட்டவங்க எத்தனை பேரு தெரியுமா? பெண்களும், உங்களைப் போன்ற பிள்ளைகளும் தவிர 4000 ஆண்களும் சாப்பிட்டாங்க. ஆண்டவரால் முடியாதது ஒன்னுமேயில்லை. அப்படித்தானே நாமும் இயேசுவை நம்பினால் நமக்கும் திருப்தியா ஆகாரம் கொடுப்பாரு. சரி தம்பி, தங்கையரே, மீண்டும் அடுத்தமாதம் சந்திப்போம். Bye! Bye! See You! God Bless You !

## உதடுகள்

| | | |
|---|---|---|
| நீதிமானுடைய | உ | பிரியமானவைகளைப் பேச அறியும் |
| நீதிமானுடைய | த | அநேகரை போஷிக்கும் |
| புத்திமானுடைய | டு | அடக்கமுள்ளது |
| மூடனுடைய | க | அவனையே விழுங்கும் |
| மூடனுடைய | ளோ | விவாதத்தில் நுழையும் |
| மூடனுடைய | | அவன் ஆத்துமாவுக்கு கண்ணி |

கிறிஸ்டிகுமார் - வதிலை

## திருமணம் = கிறிஸ்தவ குடும்பம்
## Marriage : A Christian Family

சென்ற மாத இதழின் தொடர்ச்சி.....

சகோ. கிறிஸ்டோபர்ராஜ்

(A) திரு - மணம் (தூய - கலவை)
(B) பரிசுத்த - விவாகம்
(C) இருமணம் ஒப்பந்தம்
(D) மேரி - ஏஜ் (Marry - Age) = ஏற்ற வயதில்

திருமணம், கல்யாணம் இப்படி பல பெயரில் சொல்லப்படுகிறது.

திருமணம் என்பது :

இரண்டு வித்தியாசப்பட்ட நபர்களுக்கு மத்தியில் பரிசுத்தமாய், ஏற்ற வயதில் மணங்கமழ இருவரும் சேர்ந்து ஏற்படுத்திக் கொள்ளும் ஒப்பந்தத்தின் ஆரம்பம். இது ஒப்பந்தம் என்பதால் இதன் திட்டம், எதிர்பார்ப்பு, நன்மை, தீமை, கொடுப்பது, வாங்குவது, பரிசுத்தமான எண்ணத்துடன் தேவனை மையமாக வைத்து கையெழுத்திடுவதாகும். இது வயதை, அழகை, ஜாதியை, படிப்பை, செல்வாக்கை வைத்து உண்டாவதல்ல (மத்தேயு 19:6).

இரண்டு நாட்டு மந்திரிகளின், பிரதமர்களின், ஜனாதிபதிகளின் முன்னிலையில் கொடிகளை முன்வைத்து ஒப்பந்தம் செய்கின்றனர் என்றால் அர்த்தம் என்ன? இனிவரும் நாட்களில் அந்த ஒப்பந்தப்படி இருநாட்டினரும் நடக்க வேண்டும் என்ற கட்டளைகளை இருவரும் பேசி, திட்டமிட்டு, மனம் உவந்து, விட்டுக்கொடுத்து, தங்களுக்குத் தாங்களே ஏற்றுக்கொள்வதுதான் ஒப்பந்தம்.

இதை **(BI-Lateral)** இருவருக்கிடையான உறவு என்கிறோம்.

(1) ஒரு தேசத்திற்காக இருவரும் ஒப்பந்தம் செய்து கையொப்பமிடுவதாகும்.

(2) ஒப்பந்தம் என்பது ஒரு வேலையைச் செய்ய பணம் தருபவனும், வேலை செய்பவனும் ஒப்பந்தம் செய்வது.

தேவன் உண்டாக்கும் குடும்பம் சிறப்பாய் நடைபெற தேவனின் நோக்கம் நிறைவேறச் செய்வதுதான் நம் ஒப்பந்தத்தின் நோக்கம் (திருமணத்தின் நோக்கம்) *மத்தேயு 19:4-6; சங்கீதம் 127:1, 2, 8.*

இந்த ஒப்பந்தக்காரர் இருவரும் சேர்ந்து சபையை சாட்சியாக வைத்து தேச சட்டப்படியும், தேவ திட்டப்படியும் செய்வதுதான் திருமணம் அல்லது இருமணம் ஒன்று சேரும் ஒப்பந்த நிகழ்ச்சியாகும். அப்படியானால் இத்திட்டத்தை உருவாக்கியவரை மையமாக வைத்தல்லவா எல்லாம் செயல்பட வேண்டும்.

திருமண தம்பதியர் தேவன் முன்னிலையில் செய்த ஒப்பந்தத்தைச் சில சமூகவிரோத கும்பல்கள் தாக்கும். அப்படிப்பட்ட சூழ்நிலையில் இருவரும் உடனே ஒப்பந்தக்காரரிடம் (தேவனிடம்) போகவேண்டும். ஏனெனில் தேவன் இணைத்தாரல்லவா! இந்த ஒப்பந்தம் உடைய நீ

அனுமதிக்கலாமா? நீ முதல் காரணமாயிருக்கலாமா? கூடாதே. இப்படிப்பட்ட வேளைகளில் பரிசுத்த ஆவியானவர் வேத சட்டங்களைக் (2 தீமோ. 3:16,17) கொண்டு நமக்கு உதவி செய்கிறார்.

ஆம், சகோதரனே, சகோதரியே, உன் குடும்பம் தேவதிட்டப் படியா? அவரை மையமாய் வைத்து அவர் நாமம் மகிமைப்பட இணைந்து வாழும் வாழ்வா? அல்லது பிரிந்திருக்க ஆயிரம் காரணம் காட்டுகிறீரா? (1 கொரி. 7:10-15). தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கக்கடவன்.

பெண்கள் பகுதி

## படைப்பின் ஒழுங்கும், வீழ்ச்சியும்
## The Order of Creation and the Fall

**சென்ற இதழின் தொடர்ச்சி .....**

தேவனுடைய படைப்பின் கரத்திலிருந்து வெளிவந்த மனுஷனும், மனுஷியும் பரிசுத்தமுள்ளவர்களாகவும், பாவமற்றவர்களாகவும் இருந்தனர். ஆனபோதிலும், தாங்களாக தேர்வு செய்யக்கூடிய அதிகாரத்தையும் பெற்றிருந்தனர். கர்த்தர் அவர்களுக்கு, கீழ்படிந்திருக்கும்படி சில சட்டங்களையும் உருவாக்கினார். இச்சட்டங்களுக்குக் கீழ்படியாதவர்களாய் தாங்களாகவே தேர்வு செய்யக்கூடிய சுயாதீனத்தை அப்பியாசப்படுத்தி, அதாவது பரிசுத்தமான நிலையிலிருந்து விழுந்து, மீறுதலுக்குட்பட்டு பாவிகளாக மாறினார்கள். தேவன், ஆரம்பம் முதற்கொண்டே பாவம் மரணத்தைக் கொண்டு சரீரத்திலும், ஆவியிலும் மரணத்தை ஏற்படுத்தும் என்று எச்சரித்தார். "தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசிக்க வேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்" (ஆதியாகமம் 2:16,17).

எப்படியோ, சாத்தான் சர்ப்பத்தின் உருவில் தோட்டத்திற்குள் நுழைந்து, ஏவாளை நோக்கி, "நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ" என்று கேட்டது.

அதற்கு ஏவாள், "நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம். ஆனாலும் தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து, தேவன்: நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும், அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார்" என்று பதிலுரைத்தாள்.

அதன் பின்பு சர்ப்பம் கூறியது, "நீங்கள் சாகவே சாவதில்லை. நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும்

என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப் போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார்" என்றது.

சாத்தானுக்குச் செவிகொடுத்தவளாய் ஏவாள், அந்த மரத்தின் கனி புசிப்புக்கு நல்லதும், கண்களை தெளிவிக்கிறதுமாயிருக்கிறது, அத்துடன் இது தன்னை தேவனைப் போல் மாற்றும் என்று நம்பினாள். ஆகவே "... அவள் அதின் கனியைப் பறித்து, புசித்து தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான்" (ஆதி. 3:3-6).

1 தீமோத்தேயு 2:14ல் சொல்லப்பட்டபடி, ஏவாள் சாத்தானால் வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்குட்பட்டாள். இவள் பிசாசு தூண்டினபடி செய்து, இவ்வுலகத்திற்குள் பாவத்தைக் கொண்டுவந்தாள்.

– தொடரும்

*Betty Burton Choate* *In Tamil J.Glory Arjunan*

## நான் யார்?
## Who Am I?

1. நான் லேவி கோத்திரத்தான்?



2. என்னுடைய பெயர் 'ஆறுதலின் மகன்' அல்லது 'உற்சாகத்தின் மகன்' என அர்த்தங்கொள்ளும்.
3. கிறிஸ்தவத்தின் ஆரம்பநாட்களிலே நான் மனந்திரும்பினவன். கிறிஸ்து தனது ஊழியத்தை பூமியில் நிறைவேற்ற வந்த அந்த ஆரம்பநாட்களிலே அவரைப் பற்றியதான அறிவினைப் பெற்றிருந்தவன்.
4. நான் எனக்கு உண்டாயிருந்ததை விற்று அப்போஸ்தலர் பாதத்திலே வைத்தவன்.
5. நான் சபையை துன்புறுத்தியவனைச் சேர்த்துக் கொண்டவன்.
6. எருசலேமிலுள்ள சபையார் என்னை அந்தியோகியா வரைக்கும் போகும்படிக்கு அனுப்பினார்கள்.
7. பரிசுத்த ஆவியானவர் திருவுளம் பற்றினபடி நான், என்னோடு சேர்த்துக்கொண்டவனோடுகூட முக்கியமானதும், ஆபத்து நிறைந்ததுமான ஊழியத்திற்காக அனுப்பப்பட்டவன்.
8. யோவான் மாற்கு அதாவது மாற்கு சுவிசேஷப் புத்தகத்தின் எழுத்தாளன் எனது உறவினன்.
9. மக்கள் தவறுதலாக என்னை 'யூப்பித்தர்' என அழைத்தார்கள்.
10. நான் யோவான் மாற்குவைக் கூட்டிக்கொண்டு ஊழியத்திற்கென்று சீப்புருதீவுக்குப் போனேன்.

Selected From, The Voice of Truth International. Vol.9

இவன் யார்?

விடை அடுத்த இதழில் எதிர்பாருங்கள்.

## இம்மாத வேத அறிவுப்போட்டி

முதல் ஐந்திற்கு வேத வசன ஆதாரத்துடனும், கடைசி ஐந்திற்கு வேதத்திலிருந்து விடை மட்டும் எழுதி இம்மாதம் இறுதிக்குள் அனுப்பி வைக்கவும்.

1. உபாதிக்கப்படுகிறவனுக்கு அவனுடைய சிநேகிதனால் என்ன கிடைக்க வேண்டும்?
2. யாருடைய குமாரர் பேலியாளின் மக்களாயிருந்தார்கள்?
3. என்னைப் பகைக்கிறவன் யாரையும் பகைக்கிறான்?
4. நம்மில் இலட்சணமுள்ளவர்களுக்கு என்ன வேண்டியதில்லை?
5. நான் இடித்துப் போட்டவைகளையே நான் மறுபடியும் கட்டினால் எதை மீறுகிறவனென்று காணப்படுவேன்?
6. எலிசாவின் கல்லறையில் போடப்பட்ட பிரேதம் மனுஷனா அல்லது மனுஷியா?
7. பெந்தெகொஸ்தே என்பது சபையின் பெயரா அல்லது பண்டிகையின் பெயரா?
8. இந்த ஜீவனுக்கும் இதற்கு பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது எது?
9. கிரியைகளினாலே நீதியுள்ளவளாக்கப்பட்ட வேசி யார்?
10. நீங்கள் தேவனுடைய இராஜ்யத்தினிமித்தம் பாடு அநுபவிக்கிறவர்களாயிருக்க, அந்த இராஜ்யத்திற்கு நீங்கள் பாத்திரரென்றெண்ணப்படும்படிக்கு, . . . அதுவே எப்படியிருக்கிறது?

குறிப்பு : வேத அறிவுப்போட்டி வேத அறிவைப் பெருக்கிக் கொள்ளவே. இதில் கலந்து கொள்ளும் சகோதர, சகோதரிகள், மற்றும் மாணவ, மாணவிகள் உங்கள் சுயமுயற்சியில் விடைகளை வேதாகமத்தை வைத்துக் கண்டுபிடியுங்கள். தயவுசெய்து மற்றவர்களைப் பார்த்து எழுதாதீர்கள். இவ்விதழில் பெயர் இடம்பெற்றால் போதுமா? ஜீவபுஸ்தகத்தில் உங்கள் பெயர் இடம் பெற வேண்டாமா? கீழ்காணும் வசனங்களைப் படித்து முடிவு செய்க.

பிரசங்கி 12:14; மத்தேயு 5:37; எபேசியர் 4:25; 1 பேதுரு 4:5; மத்தேயு 12:36.

ஆசிரியர்.




# HEAR THE VOICE OF TRUTH
## ON RADIO SRILANKA

| LANGUAGE | DAY'S | TIME | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday, Thursday | 8.45P.m 9.00P.m<br>9.00P.m 9.15P.m | Box.3815<br>New Delhi - 110 049 | SUNNY DAVID |
| ENGLISH | Friday | 7.45P.m 8.00P.m | Box 3815<br>New Delhi -110049 | J.C. CHOATE |
| TELUGU | Sunday, Tuesday, Thursday | 2.00P.m 2.15P.m | Box. 80<br>Kakinada - 533 001 | JOSHUA GOOTAM |
| TAMIL | Sunday, Tuesday, Thursday | 6.45P.m 7.00P.m | Box. 8405<br>Bangalore - 560 084 | P.R.SWAMY |
| MALAYALAM | Friday | 3.45P.m 4.00P.m | Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034 | P.K. VARGHESE |
| KANNADA | Sunday | 1.45P.m 2.00P.m | Box. 448<br>Bangalore - 600 004 | ROBERT RATHNAKAR |

Please write to these Addresses for Bible Correspondence Course, Magazines and other Christian Literature in Language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

**WORD OF CHRIST**

**MONTHLY MAGAZINE**

Regd. No. 84661 - 92

Postal Regn.No.TN/DDL/19

**Edited by B.Arjunan on behalf of Church of Christ**

2.2.102-D/5 Rajan Nagar

*Batlagundu and Printed at Novelty Press for Shanthi Printers*

**BATLAGUNDU - 624 202.**

**இவ்விதழ் தேவைக்கு இன்றே தொடர்பு கொள்ளவும்**

**எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க அன்புடன் அழைக்கின்றோம்**

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | காலை | 9.00 | மணி |
| வியாழன் | மாலை | 6.45 | மணி |



**கிறிஸ்துவின் சபை**

*2.2.102–D/5 ராஜன்நகர்*

வத்தலக்குண்டு - 624 202

திண்டுக்கல் மாவட்டம்.

Phone: (04543) 23278

From

WORD OF CHRIST

*POST BOX NO.5*

BATLAGUNDU - 624 202

*S.INDIA.*

To